

போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜெட்

III-வது பாகத்தின் ஸப்ளிமென்ட்

SUPPLEMENT TO PART III OF THE FORT ST. GEORGE GAZETTE.

JUNE 13, 1922.

ந. 9(3).] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1922-ம்௵ ஜூன்௴ 13௳. [விலை, 3 பை.

இந்தியா கவர்ன்மென்ட் மசோதா ஆக்ட்.

BILL OF THE GOVERNMENT OF INDIA.

இராஜாங்க சபையிலும் சட்டநிரூபண சங்கத்திலும் கொண்டுவரப்பட்ட மசோதா ஆக்டுகளும், ஷை சபைக்கும் சங்கத்துக்கும் அனுப்பப்பட்ட ஸெலெக்ட் கம்மிட்டியாரின் ரிபோர்ட்டுகளும், இந்திய சட்ட நிரூபண விதிகளைச் சேர்ந்த 18-வது விதியின்படி பிரசுரிக்கப்பட்ட மசோதா ஆக்டுகளும்.

இந்தியா கவர்ன்மென்ட்.

சட்டநிரூபண இலாகா.

அடியிற்கண்ட மசோதா ஆக்டானது - 1922-ம்௵ பெப்ரவரி௴ 28௳ இந்திய சட்ட நிரூபண சபையில் கொண்டுவரப்பட்டது :—

No. 12 of 1922.

1922-ம்௵த்து 12-ம் ஷை.

A BILL FURTHER TO AMEND THE INDIAN PENAL CODE.

இந்தியன் பினல் கோடைப் பின்னும் திருத்துவதற்கான மசோதா ஆக்ட்.

1860-ம்௵த்து 45-வது ஆக்ட்.

இந்தியன் பினல் கோடைப் பின்னும் திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

சுருக்கமான பெயர்.

1. இந்த ஆக்டை, இந்தியன் பினல் கோடைக் குறித்த 192 -ம்௵த்து (திருத்துவதற்கான) ஆக்டென்று சொல்லலாம்.

1860-ம்௵த்து 45-வது ஆக்ட்.

1860-ம்௵த்து 45-வது ஆக்ட் 375-வது பிரிவில் திருத்தம்.

2. இந்தியன் பினல் கோட் 375-வது பிரிவில் "பன்னிரண்டு" என்னும் வார்த்தை வருகிற இரண்டு இடங்களிலும் அதற்கு பர்த்தியாக "பதினான்கு" என்னும் வார்த்தையை அமைத்துக்கொள்ளவேண்டும்.

1891-ம்௵த்து 10-வது ஆக்ட்.

1891-ம்௵த்து 10-வது ஆக்ட் ரத்தாவது.

3. இந்து தேசத்துக் குற்றவிசாரணைச் சட்டத்தைத் திருத்துவதற்கான 1891-ம்௵த்து ஆக்ட் இதனால் ரத்து செய்யப்படுகிறது.

இந்த மசோதா ஆக்ட் பிறப்பதற்குண்டான ஹேதுக்களும் நோக்கங்களும்.

இந்தியன் பீனல் கோட் 375-வது பிரிவில் "ஐந்தாவது" என்று குறிப்பிட்டிருக்கும் பகுதியிலே துராகிருதமான புணர்ச்சி என்பதன் அர்த்தத்திலும அந்தப் பிரிவைச்சேர்ந்த "விலக்கு" நிபந்தனையிலும் "பன்னிரண்டு" என்னும் வார்த்தைக்கு பர்த்தியாக "பதினான்கு" என்னும் வார்த்தையை அமைத்துக்கொண்டு, ஷை குற்றத்தின் விஷயத்தில் சம்பந்தப்பட்ட ஸ்திரீ சம்மதம் கொடுக்சத்தக்க வயதைப் பன்னிரண்டு வருஷத்திலிருந்து பதினான்கு வருஷத்துக்கு உயர்த்துவதே இந்த மசோதா ஆக்டின் நோக்கமாகும்.

இந்தத் திருத்தம் செய்வதற்குக் காரணங்கள் எவையென்றால்,—1860-ம் வருஷத்தில் தயார் செய்யப்பட்டபடியுள்ள பிரதம பீனல் கோடின்படிக்கு துராகிருதமான புணர்ச்சியென்னும் குற்றத்தின் காரியங்களுக்கு சம்மதம கொடுக்கத்தக்க வயதானது பத்து வருஷமென்று நிஷ்கரிஷை செய்யப்பட்டிருந்தது. ஜனங்களுக்குள் முன்னேற்றமடைந்திருக்கும் பிரமுகர்கள் இது விஷயமாய்ச் சட்டநிரூபண சபையார் செய்திருப்பது சரியல்லவென்று எப்போதும் ஆட்சேபித்து வந்திருப்பதுமல்லாமல் இந்தப்படி நிஷ்கரிஷை செய்திருக்கும் வயதைஉயர்த்துவது அவசியமென்று பொதுஜனங்களுக்கும் சட்டநிரூபண சபையாருக்கும் வற்புறுத்திச் சொல்லும் விஷயத்தில முயற்சி செய்தும் வந்திருக்கிறார்கள். ஆனால், இந்தச் சட்டத்தின் காரணமாக இன்ன வகையான கொடுமைகள் நேரிடுகின்றனவென்று (இந்தியன் லா ரிபோர்ட், கல்கத்தா, 18-வது வால்யும் 49-ம் பக்கத்திற்கண்ட) மஹாராணி சக்கரவர்த்தினியவர்களுக்கும் ஹரிமோஹன் மைத்தீ என்பவருக்கும் நடந்த கேஸில் நீதி விவகார ரீதியாய் ஸ்தாபிக்கப்பட்ட வரையிலே, தேசத்திலுள்ள வைதிகர்கள் செய்துவந்த ஆட்சேபனைக்கு பதில் சொல்ல அவர்களுக்கு சாத்தியமில்லாமலேயிருந்தது. ஷை கேஸில் குற்றஞ்சாட்டப்பட்ட புருஷன் பதினொரு வருஷம் மூன்று மாதமுள்ள தன் மனைவியுடன் புணர்ந்ததனால் அவளுக்கு மரணம் நேரிட்டதாகத் தெரியவந்தது. ஆயினும், அவன்மேல் துராகிருதமான புணர்ச்சியென்னும் குற்றம் சாட்டமுடியாமற்போய் விட்டது. பக்குவ வயது அடைந்திராத ஒரு அறியாத பெண்ணுக்கு சம்போக சம்பந்தமான உணர்ச்சி எதுவும் இருக்கவும் முடியாது, அவளுடைய தேக வளர்த்தியும் புணர்ச்சிக்கு ஏற்றதாயிராது. மேலும், புணர்ச்சிக்கு அவள் சம்மதம் கொடுப்பது சட்டப்படி சரியான சம்மதமும் ஆகாது. அப்படியிருந்தும் அவளுடைய புருஷன் குரூரமான ஒரு காரியத்தைச்செய்து அவளுடைய பிராணனுக்கு ஹானி உண்டாக்கினதற்கு இது ஒரு திருஷ்டாந்தமாகும். ஆயினும், இந்தக் கேஸினால் ஏற்பட்ட பிரயோஜனம் என்னவென்றால், இந்தியன் பீனல் கோட் 375-வது பிரிவில் வயது மிகவும் குறைவாய் நிஷ்கரிஷை செய்யப்பட்டிருந்ததன் காரணமாக பக்குவ வயது அடைந்திராத பெண்களின் பிராணனுக்குப் புணர்ச்சியினால் நேரிடும் துன்பங்களை சட்டநிரூபண சபையார் கவனித்து, அதைத் திருத்துவது அவசியமென்று உணர்ந்து, நிர்ணயிக்கப்பட்ட வயதைப் பத்து வருஷத்திலிருந்து பன்னிரண்டு வருஷமாக 1891-ம் வருஷத்து 10-வது ஆக்ட் மூலமாய் உயர்த்தினதேயாகும். சிறு வயதில் விவாகம் நடத்தி பாலிய மனைவிகளுடன் சம்போகம் செய்தது காரணமாக வேறே மரணம் எதுவும் இந்தத் திருத்தத்திற்குப் பிறகு உண்டுபண்ணப்பட்டிருப்பதாக நீதிவிவகார ரீதியாய்க் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆயினும், உயர்ந்த வகுப்புகளைச் சேர்ந்த குடும்பங்களில் தேக திடன் மிகவும் குறைவாகவும் பக்குவம் அடைந்திராமலுமுள்ள பெண்களின் பிராணனுக்கு ஹானி உண்டாகும் என்னும் பயம் முற்றிலும் நீங்கியிராமல், மேலே கண்டபடி உயர்த்தியும் இன்னும் குறைவாகவேயிருக்கும் பாலிய வயதிலேயே விவாகங்கள் நடப்பதற்கு இடங்கொடுக்கிறபடியால், மேலே கண்டபடி சம்பவிப்பது சகஜமாயிருந்தபோதிலும் அவைகளைக் கண்டுபிடிப்பது மிகவும் துர்லபமாகும். இந்தியன் லா ரிபோர்ட், கல்கத்தா, 18-வது வால்யும் 49-ம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கேஸிலே, சம்பந்தப்பட்ட பெண் தேக திடன் பெற்றவளாயிருந்ததாகத் தெரியவந்தது. ஆனால், சம்மதம் கொடுக்கத்தக்க வயதை மேலே கண்ட தீர்மானத்தில பிரஸ்தாபித்திருக்கும் பெண்களின் வயதுக்குமேல் சில மாதங்களுக்கு உயர்த்தி 1891-ம் வருஷத்து 10-வது ஆக்டின் மூலமாய்ச் செய்யப்பட்ட திருத்தத்தினால் பன்னிரண்டு வயதுக்குச் சற்று அதிகமாயிருந்தாலுங்கூட சரியான தேக திடன் பெற்றிராமலும் பக்குவம் அடைந்திராமலுமுள்ள பெண்களின் பிராணனுக்கு அபாயம் நேரிடாதபடி தடுப்பதற்குப் போதுமான பாதுகாப்பு ஏற்படவில்லை. மேலும், நல்ல தேகபலமுள்ள பெண்களின் விஷயத்திலுங்கூட, ருதுவாவதற்குமுன் சம்போகம் செய்வதனால் மரணம் நேரிடாவிட்டாலும் கொடுமையான கஷ்டங்கள் அனேகமாய் எப்போதும் உண்டாவதுமல்லாமல், பெண்களின் தேகமும் மனமும் அவளுக்குப் பிறக்கும் குழந்தையின தேகமும் மனமும் சரியாயும் ஒழுங்காயும் முதிர்ச்சியடைவதற்கு நிலையாய் ஹானியும் உண்டாகிறது. விக்டோரியா மஹாராணியவர்களுடைய ஆளுகையின் 48-ம் 49-ம் வருஷத்து ஸ்டாட்யூட் 69-வது அத்தியாயத்திற் கண்ட 4-வது, 5-வது பிரிவுகளில், துராகிருதமான புணர்ச்சி யென்னும் குற்றத்தின் விஷயத்திலே, சம்மதம் கொடுக்கத்தக்க வயதானது பதினாறுக்குக் குறைவாயிருக்கக்கூடாதென்று நிர்ணயித்திருக்கிறது. ஏனென்றால், வைத்திய சாஸ்திரப்படி இந்த வயதில்தான் பெண்ணின் தேக வளர்த்தியானது சம்போகத்துக்கும், தன்னுடைய பிராணன் அல்லது சௌக்கியத்துக்கோ குழந்தையின் பிராணன் அல்லது சௌக்கியத்துக்கோ எவ்வித அபாயமும் இல்லாமல் தேக

சௌக்கியத்துடன் கூடிய ஒரு குழந்தையைப் பெறுவதற்கும் பூர்த்தியானதாயிருப்பதாக எண்ணப்படுகிறது. ஐரோப்பாவையும் அமெரிக்காவையும் சேர்ந்த இதர நாகரீகமான தேசங்களில் துராகிருதமான புணர்ச்சி யென்னும் குற்றத்தின் காரியங்களுக்காக சம்மதம் கொடுக்கத்தக்க வயதானது பதினாறு வருஷத்துக்குக் குறைவாயிராதென்று நம்புகிறேன். ஆகவே, துராகிருதமான புணர்ச்சியென்னும் குற்றம் சம்பந்தப்பட்ட வரையில், பெண் சம்மதம் கொடுக்கத்தக்க வயதைப் பதினாறு வருஷத்துக்கு உயர்த்துவது அவசியமாகிறது. ஆனால், இந்த தேசத்தில் உயர்ந்த வகுப்புகளைச் சேர்ந்த ஹிந்துக்களுக்குள்ளும் மகம்மதியர்களுக்குள்ளும் சிறு வயதில் விவாகம் செய்யும் வழக்கம் இன்னும் இருந்து வருவதை உத்தேசித்து மத்தியதரமான ஒரு வயதையே தற்காலத்தில் நிர்ணயிப்பது உசிதமாயிருக்குமென்று எண்ணுகிறேன். ஆகவே, சம்மதம் கொடுக்கத்தக்க வயது பதினான்காயிருக்கவேண்டுமென்று ஸிஷ்கரிஷை செய்திருக்கிறது ; எனவே, அந்த வயதுக்கு முன் தன் மனைவி சம்மதித்தாலுங்கூட புருஷன் அவளுடன் சம்போகம் செய்வதைச் சட்டப்படி தடுக்கவேண்டுமென்றும் அந்தப்படி சம்போகம் செய்வது இந்தியன் பினல் கோடில் துராகிருதமான புணர்ச்சி என்பதற்குச் சொல்லியிருக்கும் அர்த்தத்தின்படி குற்றமாய்க் கருதப்படவேண்டுமென்றும் ஏற்படுகிறது. பக்குவ வயதடையாமல் விவாகமாயிருக்கும் பெண்களுக்குள்ளும் சிசுக்களுக்குள்ளும் நேரிடும் மரண வீதம் இந்தத் திருத்தத்தினால் குறைவதுடன்கூட, இனி பிறக்கும் குழந்தைகளின் தேக அமைப்பும் ஆயுளும் மனோதிடனும் விருத்தியடையுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஸோஹன் லால், எம்.எல்.ஏ.

1922-ம் ௵ நவம்பர் ௴ 23௳.

எச். மான்க்ரீப் ஸ்மித்,
இந்தியா கவர்ன்மெண்ட் ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.